[1989 மார்ச் 30

2. தகவல் கோரல்

(அ) மாநிலச் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகள் பற்றி மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் எழுப்பியது குறித்து

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நம்முடைய இந்த அவையில் நடைபெறுகிற விஷயங்களை, நாமே அதாவது ஒரு மாநிலத்திற்கு இருக்கும்படியான அதிகாரத்தினுடைய எல்லைக்கு உட்பட்டு நாமே அதைப் பேசி நம்முடைய நடவடிக்கைகளை இங்கே தீர்மானித்து முடிவு செய்கிறோம். இங்கே நடைபெறுகிற விஷயங்களை எல்லாம் மத்தியப் பாராளுமன்றத்திலே கிளப்பி விவாதிப்பதற்கு அங்கே அனுமதிக்கப்படுவதில்லை. இங்கே நடைபெற்ற விஷயங்கள் சிலவற்றைச் சில மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே கிளப்பியதை பாராளுமன்றத்தினுடைய மாண்புமிகு தலைவர் திட்டவட்டமாகக் கிளப்பக் கூடாது என்று தடுத்துவிட்டார்.

(முற்பகல் 9-50)

அதற்குப் பின்பும், அங்கே பாராளுமன்றத்திலே இருக்கும்படியான அரசாட்சியை நடத்துகின்ற பொறுப்பு வகிக்கின்ற ஒரு அமைச்சரே 'இந்த அவையில் நடந்திருக்கிறது' என்று சொல்லி அங்கே ஒரு விவாதத்தைக் கிளப்பியிருக்கின்றார்கள். அதற்கும் அவர்கள் தடுத்து பதில் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை ஒரு அமைச்சரே கிளப்புவது மிகமிக முக்கியமான விஷயம். இது எதிர்காலத்திலே எங்குபோய் சேர்க்கும் என்று சொல்ல முடியாது. ஒரு உறுப்பினர் கிளப்பினால், அதைப் பற்றி அவருக்குப் பதில் அளிக்கலாம். அவர் தெரிந்தோ தெரியாமலோ, விதியை மீறியோ கிளப்பியிருக்கலாம். அதற்குப் பதில் அளித்திருக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்களே கிளப்பும்போது அது மிக முக்கியமானது. அப்படிப்பட்ட நடவடிக்கை அங்கே நடைபெற்றுள்ளது. அப்படியானால் இந்த அவையில் சம்பந்தப்பட்டவர்களும் இதற்கு ஏதாவது பதில் கொடுக்க தாங்கள் அனுமதிக்க முடியுமா? அல்லது அரசே இதைப் பற்றி மத்திய அரசோடு தீவிரமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஒரு மாநிலத்தினுடைய உரிமையை, எதிர்த்து மீறி நடப்பதற்கு அமைச்சர்களையே அங்கே அனுமதிப்பது என்ற நிலை ஏற்பட்டதற்கு மாநில அரசானது ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? அல்லது இந்த சபையில் அதற்குத் தகுந்த பதில் கொடுக்க அனுமதிப்பீர்களா என்று அறிய அவை விரும்புகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமானது என்றாலும்கூட, அந்த அவையிலே சில உறுப்பினர்கள் இது குறித்துப் பிரச்சினைகள் எழுப்பியதும், அதற்கு நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவர் அவர்கள் மறுப்புத் தெரிவித்து

1989 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

அதைத் தடுத்ததும் போற்றத் தக்க ஜனநாயக அம்சமாகும். அதனால்தான், நேற்றைய தினம்கூட நான் நாடாளுமன்றப் பிரச்சினைகளைப் பற்றி, இங்கு ' தக்கர் கமிஷன் ' குறித்துப் பேச எழுந்தபோது அதை நான் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற சட்டமன்ற உறவுகள் சீர் கெட்டுவிடக்கூடாது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆனால் திரு. ரமணி அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு அமைச்சரே இப்படிப்பட்ட முறையைக் கையாண்டிருக்கிறார் என்பதுவேதனையின்பாற்பட்ட ஒன்றாகும். அவர்தான் அப்படி நடந்துகொண்டார் என்பதற்காக அதைப்பற்றி இங்கே விவாதித்து நாமும் அவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல என்று நான் கருதுகிறேன். எனவே இது குறித்துத், தங்களுக்கு அதிகாரமோ, உரிமையோ இருக்குமேயானால், அந்தக் கடமையை நிறைவேற்று கின்றவகையில் நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவருக்கு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்த குறிப்பை அனுப்பிவைக்கலாம் என்பது என்னுடைய கருத்து, அதற்கும் விதிமுறைகள் இடம் தருமேயானால்.

(ஆ) பேரவையில் அளிக்கப்பெற்ற நீக்க ஆணையை (Expunction Orders) யொட்டிச் செய்தியாளர்களுக்குப் பேரவைத் தலைவர் அளித்த விளக்கம்

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தங்களுடைய கவனத்திற்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை வாயிலாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

இது அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையை, அவையினுடைய உரிமையைப் பொறுத்ததாகும். பொதுவாக சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை பேரவையினுடைய தலைவர் அவர்கள், அவையினுடைய மரபுகளுக்கு, விதிகளுக்கு மாறானது என்று நினைத்தால் அதை நீக்குகின்ற உரிமை தங்களுக்கு இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டமன்றத்தினுடைய வரலாற்றில் தொடர்ந்து அப்பழி நீக்கப்படுகின்ற பகுதிகள் எவையெவை என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்திற்குள்ளே அமர்ந்து பத்திரிகையாளர்களுக்கு உத்தரவு இடுவதுதான் வழக்கமாகும், மரபாகும். ஆனால் நேற்று இங்கே நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் சட்டமன்றம் முடிந்ததற்குப் பின்னால், ஒரு மணிக்குப் பின்னால் தாங்கள் தங்களுடைய அறையிலே அழைத்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்து, அங்கே அனைத்தும் நீக்கப்பட்டதாக சொல்லி, அந்தச் செய்திகள் பத்திரிகைகளிலேயும், ரேடியோவிலேயும் வந்திருக்கின்றன. அப்படி தாங்கள் பேசப்பட்ட நிகழ்ச்சிகளை ஜனநாயக மரபுகளுக்கு மாறாக ஒருதலைப்பட்சமாக ஒரு பகுதி மட்டும் பத்திரிகையிலே வருவது போலவும், எதிர்க்கட்சிகள் சொன்ன கருத்துக்கள் பத்திரிகையிலே வரக்கூடாது என்றும் உத்தரவிட்டு